# கார்காலப் புலர்வுகள்



வேலணையூர் ரஜிந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்காலப்

# புலர்வுகள்

வேலணையூர் ரஜிந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கார்காலப் புலர்வுகள்**
கவிதைகள்
© வேலணையூர் ரஜிந்தன் (பாலசுந்தரம் ரஜிந்தன்)
முதற்பதிப்பு: மார்ச் 2021
வெளியீடு: நூலாசிரியர்
வடிவமைப்பு: எஸ்.விஜய்
அச்சகம்: விஜய் அச்சுப் பதிப்பகம், 172, மில் வீதி, வவுனியா.
077 900 9491 / 077 916 3679
பக்கம்: xvi + 79
தொடர்பு: 077 770 4055
மின்னஞ்சல்: brajinthan@gmail.com
முகநூல்: வேலணையூர் ரஜிந்தன்
**விலை : ரூ.299**

**Kaarkaalap Pularvugal**
Poems
© Velanaiyoor Rajinthan (Balasuntharam Rajinthan)
First Edition: March 2021
Published by: Author
Layout: S.Vijay
Printed by: Vijay Printing Press, 172, Mill Road, Vavuniya.
077 900 9491 / 077 916 3679
Pages: xvi + 79
Contact No: 077 770 4055
Email: brajinthan@gmail.com
Facebook: வேலணையூர் ரஜிந்தன்
**Price: Rs. 299**
ISBN: 978-624-97367-0-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்துப் புலர்விற்கு
உதயத்து ஒளி கொடுத்த
அன்னைத் தமிழுக்கு..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

## உணர்வுக்குள் ஒளிந்திருக்கும் சொற்கள்

கண்ட காட்சியை வரைபடமாக்குபவன் ஓவியன். எளிதில் ரசித்துப்போக முடியும். தான் காணும் காட்சியை வர்ணனை செய்து சொற்களில் ஏற்றி வாசிப்பவனை வருட வைப்பவன் கவிஞன். தனது சொல்லாடலில் தன்னுணர்வுக்குள் மையப்படுத்தும் ஆற்றல் கவிஞனுக்கு உண்டு. தனது வாழ்வியலில் பெரும்பகுதி பல நிகழ்வுகளை உள்ளடக்கிக் கடந்து போய்விடுகின்றது. பிடித்தவை, பிடிக்காதவை, மகிழ்ச்சி, துக்கம், கோபம் மற்றும் காதல் என இப்படிப் பல நிகழ்வுகளை அடுக்கிப் போனாலும் இன்னும் முற்றுப் பெறாமலேயே அடுத்து அடுத்து என தேடிக்கொண்டிருக்கும் தேடல்தான் சுவாரஸ்யமானவை. அந்த தேடலின் சுவாரஸ்யங்களைத் தனது சொற்களுக்குள் புகுத்தி பிறரையும் அந்த தேடலுக்குள் கொண்டு வரும் வலிமை படைப்பாளனுக்கு உண்டு. அந்தத் தேடலின் வர்ணனை யைப் புகுத்தி வாசகனை தன் எழுத்துக்களில் வயப்படுத்தும் கவிதைகளில் கவிஞனாகின்றான்.

எழுத்துக்களின் ஜாலங்களில் வர்ணங்களைக் கண்டவன் எழுத்துகளின் உணர்வில் கலைஞனாகின்றான். சொற்கள் உணர்வோடு பயணிக்கையில் வாசகன் சொற்களின் உணர்வுகளாக மாற்றப்படுகின்றான். சமூகம் இப்படியான படைப்பாளர்களைக் கொண்டாடுகின்றது. அதன் வழித் தோன்றலாக பல புரிதல்களை படைப்பு உருவாக்குகின்றது. அப்புரிதல் வழியே தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகள், ஏன் தனக்கே நடக்கும் நிகழ்வுகளையும் சமுதாய அரங்கில் அரங்கேற்றம் பெறச் செய்யும் பொழுது படைப்பாளி திறமைசாலியாக அடையாளம் காட்டப்படுகின்றான். சமூகத்தில் தனித்துவம் பெறுகின்றான்.

இப்படியாக வேலணையூர் ரஜிந்தன் "கார்காலப் புலர்வுகள்" மூலம் தனித்துவம் பெறுகிறார். சமூக நிகழ்வுகள், வலிகள், காதல் என உணர்வுகளைத் தனது சொற்களுக்குள் ஆழமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதிந்திருக்கிறார். சொற்களை நேர்த்தி செய்து அணிவகுப்புச் செய்திருக்கிறார். தன் மன அடுக்கில் நிகழ்வுகளை அடுக்கி கருத்துச் செறிவாக்கி வாசிக்க அலுமாரி ஆக்கியிருக்கிறார். "கார்காலப் புலர்வுகள்" நூலில் அனைத்துக் கவிதைகளுக்கும் தலைப்பு சூடியிருப்பது நட்சத்திரங்களுக்குள் நிலவாய் ஜொலிக்கின்றன.

தனது பிறப்பிடம், தன்னுடைய வாழ்வியல் பகுதிகள், தன் மக்கள் என ஒரு கூட்டமைப்புத்தான் மனித வாழ்வு. அவ்வாழ்வு பறிபோகும் போதும் தன் மண்ணை விட்டுப் பிரியும் போதும் ஏற்படும் வலி மரண வலியைவிடக் கொடியது. அவ்வுணர்வை வேலணையூர் ரஜிந்தன் "அவலத்தின் ஓலம்" என்ற கவிதையில் மிகுந்த வலியோடு உயிர்ப்பாக்கி இருக்கின்றார்.

"உண்டு படுத்துறங்கி
உயிர் வாழ்ந்த தாய் மண்ணை
ஒற்றை இரவில்
விட்டகன்ற பேரவலம்

கர்ப்பிணி மங்கையும்
கைக்குழந்தை மடந்தையும்
தள்ளாடும் வயோதிபரும்
கால் நடையாகப் பெருந்தூரம்

பசிக்கும் பசியெடுக்கும்
பயமும் உயிரெடுக்கும்
பாவம் ஏதும் செய்யாமல்
சிலுவை சுமந்த தமிழர் நாம்

விமானப் பேரிரைச்சல்களில்
எறிகணைச் சத்தங்களில்
மிச்ச உயிரைத் தாவிக்கொண்டு
மரண விளிம்பில் ஓடினோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் தாய் மண்ணை விட்டுப் பிரியும் பேரவலம், கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள், முதியவர்களின் பரிதவிப்பு, உயிர்ப்பயம், பசி என்பதில் "பாவம் ஏதும் செய்யாமல் சிலுவை சுமந்த தமிழர் நாம்" என்ற வரிகள் வலியின் உச்சம்.

"மிச்ச உயிரைத் தாவிக்கொண்டு மரண விளிம்பில் ஓடினோம்" இது உயிர்வதையின் உச்சம்.

1995ம் வருடம் எனது கல்லூரி நாட்களில் இந்த அவலங்களை செய்திகளில் காணும்போது கண்ணீர் வடித்ததையெல்லாம் வேலணையூர் ரஜிந்தன் நினைவுக்குக் கொண்டு வந்து விட்டார்.

உலகின் அனைத்து ஜீவராசிகளுக்கும் தேடல் இருப்பதால் தான் உலகம் சமநிலை அடைகின்றது. வாழ்வியலில் தேடல் முக்கிய பங்கெடுத்து அடையாளப்படுத்துகின்றது. இப்படி யாக "என் தேடல்" என்ற கவிதையில் கவிஞன் கையில் எழுதுகோல் கிடைத்தால் தேடலின் துவக்கம் தொடங்கி விடுகின்றது. வார்த்தைகளின் ஜாலம் கவிதைகளாகி விடுகின்றது.

"வானையும் நிலவையும்
கடலையும் காற்றையும்
பொங்கி வரும் அலையையும்
வரிகளில் வடிவம் செய்வேன்

வளைந்தோடும் நதியையும்
வற்றாத ஆற்றையும்
வரண்டு போன நிலத்தையும்
கொக்கையும் மீனையும்
குயிலையும் மயிலையும்
மரத்தையும் கிளையையும்

மானையும் புலியையும்
நல்ல பல மாந்தரையும்
வாரத்தைகளால் காதல் செய்வேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக தனது எழுத்துகளின் தேடலுக்குள் காதல் செய்ய வைக்கிறார் கவிஞர்.

தற்பொழுதெல்லாம் ஒரு தலைமுறை கடந்து போனால் அடுத்த தலைமுறையினருக்கு அதன் அடையாளங்கள் தெரியாமல் போய்விடுகின்றன. நவீன யுகம் அவ்வளவு மாற்றியிருக்கின்றது. நமது வழித்தோன்றல்களையே மறக்கச் செய்திருக்கின்றது. முன்னோர்கள் விட்டுச்சென்ற பண்பாடு, பாரம்பரியம், வாழ்வியல் கொள்கைகளை பின்பற்றினாலே உலகம் செழிப்புறும் இதனை வழித்தடம் என்ற கவிதையில்

"கண்ணியம் தவறா ஒழுக்க நெறியிலும்
பண்பாடு கலாச்சார நேர் வழியிலும்
பயணப்பட்டார்கள்

இயற்கை உயிரி பெண்மை மனிதம்
அனைத்தையும் காக்கும்
கடவுள்கள் ஆனார்கள்

தாய் மண்ணைத்தான் உயிரென நேசித்தார்கள்
தமிழ் மொழியைத்தான் மூச்செனச் சுவாசித்தார்கள்

தமக்காக வாழாது நமக்காக வீழ்ந்தவர்கள்
இந்த வாழ்வியலே
அவர்களால்தான் எமக்குக் கையளிக்கப்பட்டிருக்கிறது"

இப்படியாக நமது வாழ்வு நமது முன்னோர்களால் அர்ப்பணிக்கப்பட்டுள்ளதை கவிஞர் இக்கவிதை வரிகளில் நயம்படத் தெளிவுபடுத்தி இருக்கின்றார்.

கட்டமைக்கப்பட்ட மனித வாழ்வு தற்போது கட்டுப்பாடு இழந்து நெறிமுறைகளை மறந்து குரோதங்கள், வன் கொடுமைகள், பாலியல் பலாத்காரம் போன்றவைகளினால் அஞ்சி நடுங்கும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. உலகத்தின் ஏதாவது ஒரு மூலையில் இந்த அவலத்தின் ஓலக்குரல் கேட்டுக்கொண்டேதான் இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் வேலணையூர் ரஜிந்தன் "வீணைகள் எரிகின்றன நரகத்தில்" என்ற கவிதையில் இந்தப் பேரவலங்களை இப்படியாகப் பதிவு செய்கின்றார்.

"கட்டவிழ்த்து விடப்பட்ட
காட்டுமிராண்டித்தனம்
உலகத்தின் மூலைகளில்
நொடிக்கொரு முறை
நிகழ்ந்திடும் கொடூரம்

கனவுகள் பல சுமந்து
கல்வி தேடும் பாவைகளும்
காமுகர்கள் கரங்கள் பட்டு
கருகிப் போகும் மொட்டுக்கள்"

என வேதனையோடு பதிவு செய்யும் கவிஞர்

"நீதி தேவர்கள் கரங்களே
நீதி வேண்டும் பெண்மைக்கு
நித்தம் நிகழும் அநீதிக்கு
நிரந்தர தீர்ப்பு எழுதுங்கள்"

என வேண்டுகோள் விடுக்கின்றார்.

"கார்காலப் புலர்வுகள்" இந்த நூலில் 55 கவிதைகளை உணர்வோடு கலந்த சொற்களைக் கொண்டு தமிழுணர்வு, வலிகள், காதல் என மிக நேர்த்தியாக வாசிப்போரை கவிதைகளாக மாறச் செய்திருக்கின்றார். இத்தொகுப்பு கவிஞரை மிகைப்படுத்தி அடையாளப்படுத்துகின்றது. "கார்காலப் புலர்வுகள்" அனைவருடைய கரங்களிலும் தவழ்ந்து வாசிக்கப்படவேண்டிய ஓர் அடையாளப் புத்தகம்.

அழகிய உணர்வோடு கூடிய சொற்களால் வலம் வரும் அனைத்துக் கவிதைகளும் சிறப்பானவை. சமுதாய நோக்கில் கருத்துச் செறிவு அடங்கிய எழுத்துக்கள் கொண்ட சொற்களை உள்ளடக்கிய "கார்காலப் புலர்வுகள்" உலக அரங்கில் பேசப்பட வேண்டிய புத்தகமாக வெற்றி பெற வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போன்ற பல புத்தகங்களைப் படைத்து சமுதாய அரங்கில் புகழ்பெற வாழ்த்துவதோடு, உணர்வுகள் கலந்த சொற்களோடு "கார்காலப் புலர்வுகள்" தொகுப்பில் என்னைப் பயணிக்க வைத்த கவிஞர் வேலணையூர் ரஜிந்தன் அவர்களுக்கு எனது மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

கவிஞர் **கோவை சசிகுமார்**
வலைத்தளம்: www.sasikumarkavithigal.blogspot.in
முகநூல்: கவிஞர் கோவை சசிகுமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

வேலணை மண் பெரும் அறிஞர்களையும், கலைஞர் களையும், தலைவர்களையும், வீரர்களையும், வணிகர் களையும் மட்டுமன்றி, பல கவிஞர்களையும் உருவாக்கித் தமிழ்கூறும் நல்லுலகிற்கு அளித்திருக்கின்றது, அளித்துக் கொண்டுமிருக்கின்றது. அந்தவகையில் எம்மண்ணின் பெருமை சாற்றும் மற்றோர் மைந்தனான கவிஞர் பா.ரஜிந்தன் அவர்களின் இன்னுமோர் கனதியான கவிதை நூலான "கார்காலப் புலர்வுகள்" என்கின்ற இக்கவிதை நூலின் வெளியீட்டிற்கு வாழ்த்துரை வழங்குவதில் வேலணை மக்கள் ஒன்றியம் பெருமையும் பேருவகையும் கொள்கிறது.

வேலணையூர் ரஜிந்தன் என்னும் பெயரில் இதுவரை இவரால் வெளியிடப்பட்ட பொற்கனவு, நிலா நாழிகை, கட்டிடக் காடும் யுரேனியக் கதிரும் ஆகிய கவிதை நூல்கள் இக்கவிஞரின் திறமைக்குக் கட்டியம் கூறி நிற்கின்றன. அவ்வாறே "கார்காலப் புலர்வுகள்" என்கின்ற இக்கவிதை நூலும் மக்களின் கரங்களைச் சென்றடைந்து அவர்களின் மனங்களை மலரச்செய்யட்டும் என வாழ்த்துவதுடன், எம்மண்ணிற்கு பெருமை சேர்க்கும் வகையில் வரும் தடைகளை உடைத்து மேலும் பல அரிய படைப்புகளைத் தமிழுலகிற்கு அளிக்கவும் எதிர்பார்க்கின்றோம்.

நன்றி.

**வேலணை மக்கள் ஒன்றியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

தன்னைத் தானே தீயிட்டு எரித்துக்கொள்ளுமொரு வேட்கை தான் கவிதை. அது மனிதனை விடாமல் காலம் காலமாய் துரத்தியபடியே இருக்கிறது வரமாகவும் சில சமயங்களில் சாபமாகவும்.

எழுதுகின்ற கவிஞனுக்கு அது எப்படி அமைகிறதென்று அவன் படைப்பின் மூலமாகவே நாம் அறிந்து கொள்ளலாம்.

கவிஞர் ரஜிந்தனுக்கும் கவிதை வரமாகவும் சாபமாகவும் சரிசமமாகத்தான் இருக்கிறது. "கார்காலப் புலர்வுகள்" என்று நூலுக்கு பெயரிட்டு முதல் கவிதையில் தமிழை போற்றி நூலை ஆரம்பித்து வைக்கிறார்.

மொத்தம் 55 கவிதைகள் இந்தத் தொகுதியில் உள்ளன. அதில் பல கவிதை வரிகள் வாசகனாய் என்னை வெகுவாகப் பாதித்தன சிலவற்றை மட்டுமிங்கே சொல்கிறேன். மிச்சத்தைத் தேடிக் கண்டடையும் பொறுப்பை உங்களிடமே விட்டு விடுகிறேன்.

"கார்காலப் புலர்வுகள்" என்னும் கவிதையில் கால மாற்றத்தை, விஞ்ஞானம் உருக்குலைத்த உலகத்தை நம் கண் முன் நிறுத்துகிறார். "கார்காலப் புலர்வுகள் எல்லாம் புதிய மாற்றத்திற்கான அறைகூவல்களே" என்று மாற்றத்திற் கான புது விதைகளை தூவுகிறார். காதலை இப்படிப் பாடுகிறார்.

"உனது குட்டித் தூக்கத்தில்
இறக்கை அடிக்கிறது மனது
இந்தத் தருணங்களில் தான் - என்
அண்டசராசரங்களும் அடங்கியது" என்று.

காதல் இவரையும் விட்டு வைக்கவில்லை என்பதற்குச் சாட்சியாய் இக்கவிதையை எடுத்துக்கொள்ளலாம். கேட்டும் படித்தும் நீண்ட காலமாகிய தூய தமிழ்ச் சொற்களை நூல் முழுக்கப் பார்க்க முடிகிறது. மேற்கோள் காட்டும்படியான வரிகளும் கொண்டாடப்படவேண்டிய வரிகளும் நூல் முழுக்க ஏராளம் இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துக்களை வாங்கி அணிவதைக் காட்டிலும் நாமே மூழ்கி மூச்சடக்கி எடுத்தால் அதை எப்படி இன்னும் பத்திரமாய் வைத்திருப்போமோ அதிலிருந்து எப்படி அனுபவம் சேர்ப்போமோ அப்படி இந்த நூலுக்குள் மூழ்கும் போது நீங்கள் நிச்சயம் முத்துக்களைக் கண்டடைவீர்கள். இதுவும் மற்றொரு நூலைப் போல கடந்து போய்விடாமல் ஒரு மழையை எதிர்கொள்வது போல இந்நூலை நீங்கள் எதிர்நோக்கினால் நிச்சயம் மழையின் சௌகரியம், அசௌகரியம் இரண்டையும் உணர்வீர்கள்.

அசௌகரியம் என்று நான் இங்கு குறிப்பிடுவது சிதையும் மனித வாழ்வை கவிஞர் வருத்தத்துடனும் கோபத்துடனும் கவிதையில் வெளிப்படுத்துவதைக் குறிப்பிடுகிறேன். நம்மால் எழுப்ப முடியாக் குரலை அவர் நிறைய இடங்களில் அவலங்களுக்கு எழுப்பியுள்ளார். அதனை அசௌக ரியமாகக் கருதாமல் உள்ளத்துக் குமுறலாக கணக்கி லெடுத்துக் கொண்டு கவித்துவம் வளரவும், கவியுள்ளம் வாழவும் வாழ்த்துக்கள் என நான் அவரை வாழ்த்துகிறேன் நீங்களும் அவரை வாழ்த்துங்கள்.

நிறை நேசங்களுடன்,
**வழிப்போக்கன்**
தமிழ்நாடு, இந்தியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

கவிதை என்பது மொழியின் அழகும் உள்ளத்து உணர்வுகளின் ஒருமித்த வெளிப்பாடும் ஆகும். சில புனைவுகளைச் சேர்த்துச் சொல்வதால் அதற்கென ஒரு தனிநடையும் சிறப்பும் இருக்கிறது. புனைவுகளின்றி ஒரு நயமின்றிச் சொல்லப்பட்டால் அது ஒருபோதும் சிறந்த கவிதையாகாது. வாசகனை ஈர்க்கும் காரணிகளில் புனைவுகளுக்கும் ஒரு முக்கிய இடமிருக்கிறது. "ஒரு கலையை வரைவிலக்கணத்திற்குள் அடைத்துவிட முடியாது" என்கிறார்கள் அறிஞர்கள்.

அவ்வாறே கவிதைக் கலையும் எல்லைகளுக்குட்பட்டு இயங்குவதென்பது பொருத்தமற்ற ஒன்றே. ஆயினும் சில சிறப்புப் பண்புகளைக் கவிதை கொண்டிருந்தாலும் கவிதைக்கென்று எந்தவொரு நிலையான வரைவிலக்கணங்களும் இதுவரை இல்லை என்பது உறுதியாகிறது.

அவ்வகையில், புதுக்கவிதையின் முன்னோடியாகத் தமிழில் மஹாகவி பாரதியார் திகழ்ந்து வருகிறார். புதுக்கவிதையானது இன்று பல பரிமாணங்களைக் பெற்றிருக்கிறது. இக்காலமும் புதுக்கவிதைகளின் ஆட்சிக்காலம் ஆகியிருக்கிறது. அவ்வகையில் கவிதை உலகில் எனது நான்காவது படைப்பாகக் "கார்காலப் புலர்வுகள்" இப் புதுக் கவிதைத் தொகுப்பு பிரசன்னமாகிறது. பொற்கனவு, நிலா நாழிகை, கட்டிடக் காடும் யுரேனியக் கதிரும் தொகுப்புகளைத் தொடர்ந்து காலத்தின் பதிவாகவும், உள்ளத்து உணர்வுகளின் ஆக்கபூர்வ வெளிப்பாடாகவும், வாசகர்களின் தேடலுக்குத் தீர்வாகும் உன்னத பாடுபொருள்களையும் பாடிநிற்கிறது கார்காலப் புலர்வுகள்.

கடந்த காலங்களில் கிடைத்த அதே பேராதரவு இந்நூல் தொகுப்பிற்கும் கிடைத்திருப்பதும், கிடைக்க இருப்பதும் என் கவிப்பயணத்தில் திடமான தன்னம்பிக்கையைத் தந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வகையில், கார்காலப் புலர்வுகள் தொகுப்பிற்கான ஆதரவும் அனுசரணையும் வழங்கியிருக்கும் வேலணை மக்கள் ஒன்றியம், அதன் நிர்வாகத்தினர்க்கு என் ஆத்மார்த்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் நூலுக்கான அணிந்துரையை வழங்கியிருக்கும் மதிப்பிற் குரிய கவிஞர் கோவை சசிகுமார் அவர்களுக்கும், நூலின் அட்டைக்குறிப்பை எழுதியிருக்கும் கவிஞர் சேரன் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய கவிஞர் வழிப்போக்கன் மற்றும், வேலணை மக்கள் ஒன்றியத்திற்கும் எனது பேரன்பின் நன்றியினைத் தெரிவித்து நிற்கின்றேன்.

அத்தோடு நூலை சிறப்புற வடிவமைத்து, அச்சுப்பதித்து, அழகான கருத்துள்ள அட்டைப்படத்தினை வழங்கியிருக்கும் விஜய் அச்சகம் வவுனியா, அதன் உரிமையாளர் எஸ்.விஜய் அவர்களுக்கும், என் கவிப்பயணத்தில் உறுதுணையாக நிற்கும் என் உற்ற துணைவி, பெற்றோர், சகோதரன், மற்றும் உறவினர்கள், கவிஞர்கள், நண்பர்கள், அனைவருக்கும் பேரன்பின் நேசங்களை உரித்தாக்கி மகிழ்கிறேன்.

"என் மூச்சும், வாய்ப் பேச்சும், கவி வீச்சும்
தமிழையே உயர்வாய்ப் போற்றும் - என்றும்
தரணியில் தமிழைப் பறை சாற்றும்"

**வேலணையூர் ரஜிந்தன்**
(பாலசுந்தரம் ரஜிந்தன்)
ஆசிரியர்,
யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே..


தன்னிகர் இல்லாத்தமிழே! / 01
எழுத்தாணி முனையில் / 02
கார்காலப் புலர்வுகள் / 04
காற்று வெளியிடையே! / 06
எணை ஆச்சி / 07
கடிகாரமே கதை கேளு! / 09
கனவுக் குறிப்பு / 10
கார்த்திகை பூத்திருக்கிறது / 12
தமிழும் நானும் / 14
மாலைப் பொழுதொன்றில் / 15
அவலத்தின் ஓலம் / 16
அவர்கள் ஆடம்பரக்காரர்கள் / 18
தவறிய பாதத்தடம் / 19
விடா முயற்சி / 20
வேகம் / 21
ஓவியனும் வரைந்ததில்லை / 22
என் தேடல் / 23
அந்த நிமிடங்களில் கரைகிறேன் / 25
தென்னங் கீற்றும் தென்றல் காற்றும் / 26
உலகத்தின் தூக்கம் கலையாதோ / 27
என்னுயிர் உன்னிடத்தே! / 28
அரச மரத்தடிப் பிள்ளையாரைக் காணவில்லை / 29
நிசப்தங்களின் மீதூறும் உள்ளுணர்வுகள் / 31
வாழ்வு தேடும் நெஞ்சங்கள் / 33
பேரமைதி / 35




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேர் / 36
நிலைமாறும் உலகம் / 37
கவிதையே உன்னைக் காதலிக்கிறேன் / 38
உணர்வுகளின் பாதையில் / 39
திருந்து பிறகு திருத்து / 40
மரம் / 41
அலை மோதும் உள்ளம் / 43
புதிதாய் ஒரு விதி செய்வோம் / 44
நீ நான் / 46
கல்லாய்ப் போன மனிதன் / 47
வழித்தடங்கள் / 49
வாசல் தோறும் வேதனைகள் / 51
நிலம் கொத்திப் பறவை / 52
அம்பன் புயலும் காகக்கூடும் / 54
வீழ்வேனென்று நினைத்தாயோ? / 56
காவோலை / 57
அன்பின் வழியது / 59
நான் நானாகவே! / 61
குடிசையிலே வாழ்வோமே! / 63
உயர்ந்த இடத்தில் / 64
உன்னதமானவர்கள் / 65
வீணைகள் எரிகின்றன நரகத்தில் / 66
முன்பனி / 68
முடிவறியாப் பயணம் / 69
மனிதன் நினைப்பதுண்டு! / 70
அலையாகுவேன் நீ கரையாகினால் / 72
சிறு விண்ணப்பம் / 73
இளைஞனே சற்று நில்! / 74
ஏழைப்பாலன் / 76
தை மகள் பிறப்பு / 78



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னிகர் இல்லாத்தமிழே!

மண்ணில் பல மாந்தர்
எந்த மொழி உரைத்தும்
எந்தனது மொழி போல்
எங்கும் உண்டோ சிறப்பு

தன்னிகரே இல்லாத்
தனிப்பெரும் தமிழே!
எண்ணில் அடங்காத
பெரும் புகழ் சேர்த்தாய்

உந்தனது பெருமை
உலகறிந்த உண்மை
புதுமையும் உனதே!
பழமையுன் மேன்மை

திருக்குறளும் கொண்டாய்
காப்பியம் பல கண்டாய்
அகநானூறு புறநானூறு
அழகாய் அணி சேர்த்தாய்

முச்சங்கம் வளர்த்த
முதன்மைச் செந்தமிழே!
மொழிகளுக்கு மூத்த
மேன்மைச் செம்மொழியே!

என் சங்கத் தமிழே!
சந்தம் சிந்தும் அழகே!
நீ தலை நிமிர்ந்தால்
அழியும் தீவினையே!

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தாணி முனையில்

புதிதாய்ப் புரட்டுகிறேன்
வாழ்தலுக்கான புதிய அத்தியாயத்தை

வெள்ளை வண்ணத்தில் ஒளிரும்
வெற்றுத் தாள்களாகவே அங்கே!

எந்தன் தூரிகை முனை கீறும்
எழில் நிறை ஓவியம் ஒன்று
துளிர்விட்டுக் கொண்டிருக்கிறது

கடந்த காலங்களில்
என் பரண்களில் பாரமாகிய
பல கறுப்புப் பக்கங்கள்
இன்று தீயிலேற்றப் படுகிறது

புழுதி படிந்து போய்க்கிடக்கும்
ஓலைச் சுவடிகள் போன்ற
அனுபவ முதிர்ச்சிகள் எல்லாம்
ஆழமாக ஆராயப்படுகிறது

துரோகத்தாலும் ஏமாற்றத்தாலும்
உடைந்து போன பயணங்கள்
தோல்விகளின் வலிமை கொண்டே
நன்கு செப்பனிடப்படுகிறது

எனக்கான பாதையை
என் சிந்தையே
தீர்மானித்துக் கொள்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால மாற்றத்தை ஏற்று
என் வீரியம் சீர்செய்யப்படுகிறது

முயற்சிகள் வீச்சோடு
பயிற்சித் தோட்டத்தில்
முளை கட்டிக் கொள்கின்றன

என்னுடைய சரிதத்தை
எனது எழுத்தாணியே
வரலாற்றில் வரைய வேண்டும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்காலப் புலர்வுகள்

பூமித்தாயின் பசுமை ஆடைகள்
களவாடப்பட்டிருக்கின்றன
நவீனத்து மனிதர்களால்

கட்டிடங்களுக்குள்ளும்
அடுக்கு மாடிகளுக்குள்ளும்
சிறை வைக்கப்பட்டிருக்கிறாள்
இயற்கை அன்னை

சுயநல மனிதத்தின்பால்
பல்லுயிர்கள் வாழ்விழந்து
காணாமல் போயிருக்கின்றன

நாகரீக வளர்ச்சியின் சிகரத்திலின்று
வைரஸ் செடிகள் செழிப்பாக
வளர்ந்திருக்கின்றன

வாழத்தகாத அவனியையே
வடிவமைத்துக் கொண்டிருக்கின்றன
அநீதியின் கரங்கள்

பழமைகள் மறந்ததினால்
புதுமைகள் கூட இன்று
பயனற்றுப் போயிருக்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரவன் வரவுகளிற் கூட
இருளோடு தான்
போராடுகிறது தற்கால வையம்

மனித எண்ணங்கள் துளிர்க்கும்
ஆரோக்கிய விருட்சத்துக்காய்
காத்திருக்கிறது காலம்

கார்காலப் புலர்வுகள் எல்லாம்
புதிய மாற்றத்திற்கான
அறைகூவல்களே.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றுவெளியிடையே!

வார்த்தையை உயிரூட்டிப் போகிறாய்
வானெங்கும் வியாபித்து நீள்கிறாய்
பூக்களும் புன்னகை வீசவே
புதுமொழி பேசியே விரைகிறாய்

உனது வருகையை உணர்த்தும்
அங்கே தலையசைக்கும் மரங்கள்
உன்னாலே பொருள் கொள்ளும்
அந்த நீலக்கடலின் அலைகள்

மோதி நீ உடைகையிலும்
இசையைப் பிரசவித்தே வீழ்கிறாய்
குழி விழுந்த மூங்கிலிலும்
சங்கீதமாய் உருமாறி எழுகிறாய்

நீ தென்றலானால் மட்டுமே
சுகித்துக் கொள்ளும் தேகம்
நீ சீற்றம் கொண்டெழுந்தால்
சீரழிந்து போகும் தேசம்

நவீனத்தை நாடியே மானிடம்
மாசு செய்திடும் செய்கையால்
சுவாசிக்கும் உன்னை நேசித்தால்
சுகமாக வாழலாம் வையகத்தில்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எணை ஆச்சி

பொக்கைவாய் அழகு ஆச்சி
பொழுது சாயப் போகுதண
அந்தக்காலம் இல்லையண
அவதானமாய் வீட்ட போண

என்னவென்று சொல்லுறதன
எப்படித்தான் சொல்லுறதன
நம்ம நாட்டு நிலவரத்தைக்
கேட்டால் தல சுத்துமண

முந்தநாத்துப் பண்ணையில
நேத்துமல்லோ கிளிநொச்சியில
மனித குலம் மாண்பறுந்து
கொல வெறியில் திரியுதண

பத்திரிகைப் பக்கமெல்லாம்
வன்முறையால் நிறையுதண
பத்தாம் வகுப்புப் பொடியனும்
பாடுகிறானண வெறித்தனமாம்

இளசு எல்லாம் போதையேறித்
தெருத் தெருவாய் திரியுதண
இரவெல்லாம் நடுத் தெருவில்
குடிச்சுப் போட்டுக் கிடக்குதண

வீண்கத விதண்டாவாதம்
வம்பளக்கும் கூட்டமண
வாய்ப்பேச்சு முடியும் முன்னே
கத்தி தூக்கும் காலமண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பென்ற வார்த்தை கூட
காலாவதியாகிப் போச்சுதண
ஆபத்தில உதவக் கூட
மனிதரிங்கே இல்லையண

பொக்கைவாய் அழகு ஆச்சி
காலம் செய்த கோலமண
நல்ல காலம் எப்ப வரும்?
நல்லூரானைக் கேட்டுப் போண.

•

(26.01.2020)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடிகாரமே கதை கேளு!

ஓடி ஓடி உழைத்தாலும்
ஓய்வெடுக்க நேரமில்லை
தேடல் மட்டும் ஓயவில்லை
தேய்கிறது நேர காலம்

தேவைகள் உள்ள போது
தீர்த்து வைக்க வசதியில்லை
வசதிகள் அமைந்த போது
தேவைகளோ காலாவதி

காலை முதல் மாலை வரை
கடிகாரத்தை மிஞ்சிய ஓட்டம்
வாழ்க்கைக்குப் பணம் தேடி
வாழ்வைத் தொலைத்து ஓட்டம்

உறவுகள் கூட இருந்தும்
உணர்வு பரிமாற முடியவில்லை
அயலவரையும் அறியாமல்
அவசர கதி வாழ்க்கை இன்று

எங்கே போகிறது மனிதம்
என்று சிந்திக்கவும் நேரமில்லை
இயந்திர யுகத்தில் சிக்கி
வாழ்வின் பொழுதுகளும் கரைகிறது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவுக் குறிப்பு

பயணித்துக் கொண்டிருக்கிறேன்
உன்னோடான நீண்ட பயணமிது..
விரைந்து செல்லும் தொடரூந்தில்
எதிரே தான் உனது இருக்கை

உன் வார்த்தைகளை
மென்று கொண்டிருக்கிறது
தண்டவாளத்தோடு காதல் செய்யும்
தொடரூந்தின் சப்தம்

இடையிடையே நிறுத்தங்கள்
மகிழ்ச்சியில் குதிக்கின்றன
உன் இதழ் உதிர்க்கும் தமிழில்
மெய்மறந்த என்னிரு செவிகள்

பச்சைப் புல்வெளிகளில்
மஞ்சள் பட்டாம்பூச்சியாக
உந்தன் விழிகளிரண்டும்
என்னைத்தான் வட்டமிடுகின்றன

துரித உணவுகளை
விரும்பி ருசிக்கின்றாய்
பங்கிட்டுக் கொள்வதில்
அலாதி ஆனந்தம் உள்ளத்தில்

உன் நளினப் பேச்சுக்களை
கேட்டது போல்
புன்னகைத்துத் தலையசைக்கும்
பாதையோரத்துச் செடிகொடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் பார்வை மழை வீழ்ச்சியால்
பெருக்கெடுத்துப் பாயும்
என் இளமை ஆறு
இன்னும் நீளாதோ என ஏக்கம்

உனது குட்டித் தூக்கத்தில்
இறக்கை அடிக்கிறது மனது
இந்தத் தருணங்களில் தான் - என்
அண்டசராசரங்களும் அடங்கியது

எனக்கான தரிப்பிடத்தில் நான்
விழித்துக் கொள்கின்றேன்
கண்டது பகற் கனவென்று
காதலில் கனவுகள் கூட வரம்தானே.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்த்திகை பூத்திருக்கிறது

காரிருள் கரைகிறது
கொஞ்சம் மஞ்சள் பூசி
நகர்கிறது நீரோடை

ஒளியும் ஒலியும்
யுத்தம் நடத்துகிறது
சப்தங்கள் எமக்குப்
பழகிப்போன சங்கதி

தாவாரப் பக்கமாக
உடலை ஒடுக்கியபடி
ஒன்றுகூடிக் கொள்கின்றன
வளர்ப்புப் பிராணிகள்

கோலம் வரைந்தபடி
வெள்ளத்தில் எதையோ
நிதானமாகத் தேடுகின்றன
நாக்கிளிப்புழுக்கள் சில

ஒற்றைப் பனையில்
காலாவதி ஆகின்றன
ஈரம் ஊறிய பனையோலைகள்

படலைப் பக்கமாக
வெள்ளைக் குடை பிடித்து
நிமிர்ந்து நிற்கின்றன சில காளான்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்துயிர் பெற்ற சில
பூச்செடிகள் இன்றுதான்
புன்னகை தூவுகின்றன

கிணற்றடி வேலியோ
யாகத்தீ வளர்க்கிறது: ஆம் அது
கார்த்திகை பூத்திருக்கிறது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழும் நானும்

அகத்திருள் நீக்கியே
அறிவொளி ஏற்றியே
அன்பின் வழி நிற்குமே
அரும் பெரும் என் தமிழ்

ஆதியில் தோன்றியே
அகிலத்தில் ஓங்கியே
பெருமைகள் தாங்கியே
மகிமை கொள் செந்தமிழ்

காப்பியங்கள் கண்டதே
காவியங்கள் கொண்டதே
புலமையில் மூத்த பல
புலவர்கள் வளர்த்த தமிழ்

இலக்கியம் இதிகாசம்
தொல்காப்பியம் திருக்குறள்
அகநானூறு புறநானூறு என்று
அழகாய் அணி சேர்த்த தமிழ்

அன்னியம் சூழ்ந்த போதும்
ஆதிக்கம் நிகழ்ந்த போதும்
குமரிக்கண்டமதை கடலே உண்ட போதும்
அழிந்திடாத தொன்மைத் தமிழ்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலைப் பொழுதொன்றில்

மஞ்சள் வெயில் சிதறும் நேரம்
பகல் வெளிறிக் கொண்டிருக்கிறது
வெற்றிலையை மென்று
துப்பிவிட்டுப் போகிறான் பகலவன்

என் தனிமை நிரப்பப்படுகிறது
வீதியோரச் சிறு தருவில் ஒரு குருவி
பேசாத மொழியொன்று புதியதாய்
அசைவுகளில் மொழிபெயர்ப்பு

குறுகிய அந்தத் தரு இடுக்கில்
அழகிய மாளிகை போல் சிறு கூடு
உலகை முத்தமிட நாட்களை எண்ணியபடி
மூன்று உயிர் முட்டைகள் தவமிருக்கின்றன

கனவுகள் பல சுமந்த படி
ஆசைகள் பல படர்த்திக் கொண்டு
தாயின் குட்டி இதயம் துடித்துக்கொண்டிருக்கிறது
நாளையும் அவ்வழி பலர் வருவார்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவலத்தின் ஓலம்

மறக்க முடியுமா?
மனங்களில் ஆழப்பதிந்த
மரண வடுக்களை

உயிருக்காய் உருக்குலைந்த
துயரக் கணங்களை

உண்டு படுத்துறங்கி
உயிர் வாழ்ந்த தாய் மண்ணை
ஒற்றை இரவில்
விட்டகன்ற பேரவலம்

கர்ப்பிணி மங்கையும்
கைக்குழந்தை மடந்தையும்
தள்ளாடும் வயோதிபரும்
கால் நடையாய்ப் பெருந்தூரம்

குமரியும் பாதை வழி
பிராணிகளும் நகர்ந்தபடி
போகுமிடம் யாரறிவார்
கால் போன இடம் தேடி

மூட்டை முடிச்சுக்களை
தலையில் முடிச்சுக்கட்டி
சின்னஞ் சிறுசுகளை
இடையும் வலிக்கத் தாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருசக்கர வண்டியை
இருட்டிலும் உருட்டியே
அடிமேல் அடிவைக்க
இடமில்லை சன நெருசல்

பசிக்கும் பசியெடுக்கும்
பயமும் உயிரெடுக்கும்
பாவம் ஏதும் செய்யாமல்
சிலுவை சுமந்த தமிழர் நாம்

விமானப் பேரிரைச்சல்களில்
எறிகணைச் சத்தங்களில்
மிச்ச உயிரைத் தாவிக்கொண்டு
மரண விளிம்பில் ஓடினோம்

செம்மணி வெளி தாண்டி
கைதடிப் பாலம் கடந்து
தென்மராட்சி வன்னியென
திசைகள் தேடித் தஞ்சம் கொண்டோம்

1995 ஐப்பசி முப்பது
ஆம் அன்று தான்..
ஆண்டுகள் பல கடந்தும்
இப்போதும் வலிக்கிறது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர்கள் ஆடம்பரக்காரர்கள்

ஏழையின் உழைப்பிற்கு
ஏற்றதகு ஊதியத்தில்
கூட்டிச் சில நாணயத்தைக்
கொடுப்பதற்கு மனமிரங்கார்

யாசகத்தோர் பாத்திரங்கள்
காற்றினாலே நிறைந்திருக்க
ஆலயங்கள் தேடிச் சென்று
உண்டியலில் பணம் நிறைப்பார்

ஒற்றைப் பருக்கையின்றி
ஒட்டி மெலிந்த மேனியோடு
பட்டினி வயிற்றோடு பலர்
வீதியிலே படுத்திருக்கப் பாரார்

குற்ற உணர்வு அற்றவராய்
உணவு மீதமானதென்று
கோடிப்புறம் சென்று கொட்டிக்
குப்பைக் குழி மூடிடுவார்

மாற்று உடை ஏதுமற்று
வறிய மங்கை தவித்திருக்க
அடுக்கு மாடிப் பொம்மைக்கெல்லாம்
ஆடம்பரமாய் அழகு சேர்ப்பார்.

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிய பாதத்தடம்

கொடிய கானகத்திலிருந்து
திசைகளைத் தொலைத்த
ஏதிலியாக மௌனக் குடைக்குள்
கூனிக் குறுகியபடி பிரஞ்ஞை

வெறுமை விழிகளுக்குள்
அண்ட வெளிகளை நிரப்பி
அர்ச்சித்து ஓய்ந்தது போல்
அலாதிக்கிறது ஆழ்மனம்

வரண்ட சகாராவில்
தனித்து விடப்பட்ட ஓநாயின்
நாவின் இறுதித் துளியாய்
வற்றிப் போகிறது நம்பிக்கை

வார்த்தைகள் முடிவதற்குள்
திக்கிப் போகிறது என் நாவும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடா முயற்சி

நெஞ்சத்தில் உள்ளது
அஞ்சாத வீரம்
பஞ்சாகிப் பொடிபடும்
எதிர் வரும் துயரம்

பாறையைப் பிளந்துமே
முளை விடும் விதையும்
முயற்சியில் பயிற்சியில்
தடைகளும் விலகும்

தயங்கினால் எட்டுமா
சாதனைச் சிகரம்
இருள் சூழ்ந்தும் ஓயுமா
உதயத்தின் கதிரும்

வீழ்ந்தாலும் அருவியாய்
குதித்தோடும் நதியும்
தோல்விகள் தாண்டியே
வெற்றியின் உதயம்

கரை கண்டும் ஓயாது
கடல் கொண்ட அலையும்
ஓயாமல் போராடும்
திடம் தானே வெல்லும்!

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேகம்

சில நொடிகள் தவறியவர்
வரலாற்றைத் தவற விட்டார்
வேகத்தில் துணிந்த வீரர்
நிலவிலும் கால் பதித்தார்

வேகம் கொண்ட பலர்
வாழ்விலே வெற்றி கண்டார்
வேகம் எல்லை மீறி
உயிரைப் பலர் பறிகொடுத்தார்

வேகம் விவேகம் இரண்டும்
வெற்றியின் ஒற்றை வழி
பொறுமை இழந்தால் வேகம்
பாதையின் முற்றுப் புள்ளி

மனித வாழ்க்கை தன்னில்
உயர வேண்டும் வேகம்
பயணப் பாதை வழி
வேண்டாம் அதிக வேகம்

நாகரீக உலகம் தன்னில்
நாளும் நேரும் வீதி விபத்து
அதிக வேகத்தின் விளைவு
பாதியிலே ஆயுள் தொலைப்பு!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓவியனும் வரைந்ததில்லை

உயிர் சுமக்கும் சிற்பமே! - நெஞ்சை
உருக வைக்கும் சித்திரமே!
ஓவியனும் வரைந்ததில்லையே
உன்னைப் போலே ஓர் அழகை!

நிலவில் பூத்த கொடி மலரே!
நிலத்தில் ஒளிரும் உடு நீயே!
நிறங்கள் ஒன்றாகி நின்றாலும் - உன்
நிற எழிலை நெருங்க முடியாதே!

சித்திரத் தேரென நடை பயில - பலர்
சிந்தனை எல்லாம் நிலை சிதறும்
சந்திர ஒளிதனை நீ அணிந்து
சாலையில் வீதியுலா வருவதென்ன!

பூக்களை மிஞ்சிய ஓர் அழகு
பூமிக்கு வந்தது உன் வரவோ?
புதுமைகள் பிறந்ததும் உன்னிடமோ? - கவிஞரைப்
புலம்பிட வைத்திடும் பேரழகே!

வையகம் வந்த வான் மதியே! -அந்த
வானவர் விழிகள் பார்த்து விட்டால்
தேவதை உந்தன் கரம் பிடிக்க
தேவலோகம் விட்டும் வந்திடுவார்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் தேடல்

எதற்கிந்த எழுதுகோல்?
ஏனிந்த எழுத்துக்கள்?
கேள்விகளால் நிறைக்கிறாய்

பூமி சுற்றுவது போல்
எழுதுகோல் பற்றினேன்
நிறுத்திடாத பற்றுதல்

வரிக்கும் வார்த்தைக்கும்
உணர்வூற்றி அழகு செய்வேன்
பிறக்கும் கற்பனைக்கு
புதுமை மிகு புரட்சி செய்வேன்

என் எழுத்துக்களை சிலர்
கவிதை என்பர்..
நான் என் மூச்சென்பேன்

அண்ட சராசரங்களை
அளந்து கடக்கும் என் எழுத்து
புதுவிதி படைத்து நிற்கும்

வானையும் நிலவையும்
கடலையும் காற்றையும்
பொங்கி வரும் அலையையும்
வரிகளில் வடிவம் செய்வேன்

வளைந்தோடும் நதியையும்
வற்றாத ஆற்றையும்
வரண்டு போன நிலத்தையும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்கையும் மீனையும்
குயிலையும் மயிலையும்
மரத்தையும் கிளையையும்
மானையும் புலியையும்
நல்ல பல மாந்தரையும்
வார்த்தைகளால் காதல் செய்வேன்

அடிமை விலங்கு உடைத்திடவே
ஆயிரம் பாட்டு செய்வேன்
அடக்கியாளும் கூட்டம் எரிக்க
எரிமலை வார்த்தை நெய்வேன்

உழைப்பைப் பகிர்பவர்க்கும்
வாடுகின்ற வறியவர்க்கும்
மாற்றுத்திறனாளருக்கும்
அன்பிலும் பண்பிலும்
ஆற்றல் மிகு வல்லவர்க்கும்
கரம் கொடுக்கும் வரி சமைப்பேன்

எழுத்துக்களால் எழுந்து நிற்பேன்
வீழ்ந்தவனுக்கும் வீழ்த்தப்பட்டவனுக்கும்
தோள் கொடுக்கும் எழுத்தாகி

வாழ்த்தும் கர ஒலி வேண்டாம்
போற்றும் விருதுகள் வேண்டாம்
வலி கொண்டு மொழி செய்யும்
நிலையதை புரிந்தால் போதும்.
●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்த நிமிடங்களில் கரைகிறேன்

அந்த மஞ்சள் வெய்யிலும்
வெட்கியது சில கணம்
மாங்கனி நிறத்தழகில்
அவளைக் கண்டு

அழகைக் கண்ட
மரங்களெல்லாம் வரிசையாக
நிழல்தரக் காத்திருக்க
அந்த ஒற்றை மரம் பெற்றதடி
அற்புத வாய்ப்பை

பூங்காவின் பூக்களுக்கு மட்டும்
ஏதோ ஒரு ஏக்கம்
பூவை அவள் கூந்தலில்
இடம் ஒன்று கிடைக்காதா என்று

ஓயாமல் வீசும் தென்றலும்
ஒரு தடவை தடக்கி வீழ்ந்தது
அவள் பாதச் சுவட்டில்
பூங்காவை அவள் கடந்த போது

என் பார்வைகள் மட்டும்
பாக்கியம் பெற்றது
அந்தப் பூங்காவைப் போலே!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னங் கீற்றும் தென்றல் காற்றும்

தென்னங் கீற்றை வருடிப் போகும்
தென்றல் காற்றே கொஞ்சம் கேளு
தேகமெல்லாம் மெய் சிலிர்க்க
தெம்மாங்கு ராகம் பாடுகிறாய்

காற்றே நீ காதல் கொண்டோ
தென்றலாகத் தவழ்ந்து வந்தாய்?
தென்னங் கீற்றோடு மகிழ்ந்து நிதம்
காதற் கதை பேசுகிறாய்

மௌனங்களைக் கலைத்து விட்டு
மோகன ராகம் இசைக்கிறாய்
சிந்தனைகளை விதைத்து விட்டு
சித்தம் எல்லாம் நெருடுகிறாய்

நாளும் பொழுதும் நான் ரசிக்க
நற் கற்பனைக்குத் தீனி தந்தாய்
கவிகளுக்கும் ஏணி தந்தாய் - என்
கவலைகளை நீக்கிச் சென்றாய்

சூரியக் கதிரொளி பட்டுத் தெறிக்க
தென்னங் கீற்று அழகாகச் சிரிக்க
தென்றல்க் காற்றே வருடி அணைத்து
கோடி அழகில் இதயம் நிறைத்தாய்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத்தின் தூக்கம் கலையாதோ?

ஊருக்கே உபதேசம்
தமக்கானதாய் இல்லை இங்கு
வேலிகளே இன்று
பயிரை அதிகம் மேய்கின்றன

நீதிகளை வரையறுத்து விட்டு
அநீதிகளை அணிந்து கொள்கிறது அதிகாரம்
நல்லவர் எனும் வெளித் தோற்றத்துக்குள்ளே
ஒளிந்து கொள்கிறது நாசவேலை

பொது நலத்தைக் கூடாரம் செய்து
தந்திரமாகப் பதுங்குகிறது சுயநலம்
அன்பைப் போதிக்கும் கரங்களே
அதிகமாக வன்முறையைக் கட்டவிழ்க்கின்றது

போலி அன்பே - இன்று
அதிக முகங்களின் முகப்பூச்சு ஆனது
அச்சுத் தாள்களுக்கே மதிப்பு அதிகம்
அதிகமாக நீதிகளும் விலை போகின்றது

சத்திய வான்களும் சமத்துவ தேவர்களும்
மானிட வாழ்வைப் போதித்த பூமி
மனிதநேயம் மறந்தவர்களின் காடானது

சமாதானத்தால் நிறைய வேண்டிய
மானிட உலகம் - இன்று
சண்டைகள் மலிந்த சாக்கடை ஆனது

மாயைக்குள் உறங்கும் உலகம்
என்றுதான் விழித்துக் கொள்ளும்?
●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுயிர் உன்னிடத்தே!

செந்தமிழைத் தேன் பிசைந்து
நாவினிக்க வார்த்தை கோர்த்து
புன்னகைக்கும் வதனமதில்
பூவிதழில் மொழி பேசுகிறாய்

பாரினிலே உனை வெல்லும்
பாவையரோ யாரும் இல்லை
பார்வையாலே எனை வெல்லும்
பருவ மங்கை உள்ளம் வெள்ளை

கனவுகளில் பூத் தூவி - அழகுக்
கவிதைகளாய் நீ மலர்ந்தாய்
கற்பனையில் ஊற்றாகி - எந்தன்
கடல் தேடிச் சங்கமித்தாய்

தென்றலும் நீ என்பேன் - அந்தத்
திங்களும் நீ என்பேன்
தீயாக எனை வாட்டும் - உந்தன்
நினைவிலே நான் வெந்தேன்

தப்பிக்க வழி இருந்தும்
தாவணிக்குள் சிறையிருந்தேன்
தேவதையே உன்னிடத்தில்
என்னுயிரை ஒப்படைத்தேன்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச மரத்தடிப் பிள்ளையாரைக் காணவில்லை

அவர்கள் ஆக்கிரமிப்புக் காரர்கள்
புதிய திட்டங்களோடே
நகர்ந்து கொண்டிருக்கிறார்கள்

கட்டிக்காத்த வரலாறெல்லாம்
காணாமல் போகின்றன
அவர்களின் அரவணைப்பிற்குள்

ஆண்டாண்டு காலங்களாய்
ஆண்ட எம் முந்தையரின்
வரலாற்றுத் தடயங்களெல்லாம்
செல்லரித்துப் போகிறார்கள்

ஏட்டில் எழுதிய ஆதாரமும்
ஆய்வுச் சான்றுகளையும்
தந்திரமாக எரியூட்டுகிறார்கள்

எம் வரலாறுகளுக்கெல்லாம்
அவர்களது வரலாற்று முலாமை
இலகுவாகப் பூசிவிடுகிறார்கள்

எமக்கான தொல்பொருட்கள்
எமக்கான கல்வெட்டுக்கள்
எமது நிலப் பெருமைகளென
அனைத்துமே அவர்களால்
உரிமை கோரப்படுகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதி மரங்களும்
வீதிகளில் விகாரைகளும்
புதிது புதிதாய் முளைக்கின்றன

கோவிற் கோபுரங்களும்
சிறியனவாகி விட்டன
அருகிலே உயர எழுப்பப்பட்ட
தாது கோபுரங்களினால்

அரச மரத்தடிப்
பிள்ளையாரையும் காணவில்லை
இப்போது அது
போதி மரமாக மாறியிருக்கிறது.
●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிசப்தங்களின் மீதூறும் உள்ளுணர்வுகள்

தனிமைகள் எப்போதும்
தனித்தே இருப்பதில்லை
அவை சில நினைவுகளை
துணைக்கு அழைக்கின்றன

நிசப்தங்களின் மீதூறும்
உள் உணர்வுகளோ
மௌனங்களைக் கடந்து
மனதோடு பேசுகின்றன

உறங்கியும் உறங்காமல்
உள்ளூறையும் ஞாபகங்கள்
ஏதேதோ தருணங்களை
மீட்டி அசை போடுகின்றன

இருண்ட காலங்களை
இலகுவில் எவர் மனதும்
மறந்தும் நகர்வதில்லை
மறைத்தே பயணப்படும்

கனத்த வார்த்தைகளை
தாங்கிய இதயத்திற்கு
உடற் காயம் ஒருபோதும்
வலித்திடப் போவதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கைத் துரோகத்தால்
நொருங்கிய நெஞ்சத்தில்
மீண்டுமோர் நம்பிக்கை
துளிர் விடத் துணிவதில்லை

வலிகளைத் தாங்கிடும்
விழிகளுக்கே தெரியும்
கண்ணீரும் அவ்வப்போது
துயர் தீர்க்கும் மருந்தென்று!

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு தேடும் நெஞ்சங்கள்

வற்றிச் செல்லும் ஓடையிலே
வாழத் துடிக்கும் மீன்களாக
வாழ்க்கை என்ற போர்க்களத்தில்
வாழ்வைத் தேடும் ஏழைகள்

வசதி வாய்ப்புப் படைத்தவன்
வகையாக வாழும் பாரினிலே
வறுமையின் கோரப் பிடிக்குள்ளே
வாழ்வைத் தொலைத்த உள்ளங்கள்

உண்ண உணவுக்கே பெரும் பஞ்சம்
உடுக்கக் கந்தல் உடைகளே தஞ்சம்
உறங்கிடவும் கனவாகிய உறையுள்
உயிர் வாழ்வே ஆனது வினாக்குறி

பிறப்பு முதலே தொடர்ந்து நீளும்
இருளால் சூழ்ந்த இன்னல் வாழ்க்கை
ஒளியைத் தேடி உழைத்திட்ட போதும்
உழைப்பைச் சுரண்டும் முதலாளி வர்க்கம்

மண்ணை நம்பி விதை விதைத்தால்
காலநிலையும் கைவிட்டுப் போனது
கடன் வாங்கி கைத்தொழில் செய்ய
வட்டி வளர்ந்து கழுத்தைச் சுற்றுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரிப்பார் யாருமில்லை
புறக்கணிப்பே புதிய வரவு
ஏக்கங்களை சுமந்த வண்ணம்
வாழ்வு தேடும் நெஞ்சங்கள்.
●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரமைதி

தாயின் மடி
தந்தையின் கரம்
தங்கையின் பரிசம்
தம்பியின் அருகு

தமையனின் அன்பு
தமக்கையின் ஆறுதல்
தோழனின் தோள்
தோழியின் வார்த்தை
தாரத்தின் முத்தம்

இவற்றில் ஏதோ ஒன்று
ஒன்றே ஒன்று மட்டும்
தேவையாயிருக்கிறது

ஊரே அமைதி கொள்ளும்
இந்த அர்த்தசாமத்தில்

என் தனிமையை
ஆசுவாசப்படுத்திக்கொள்ள.
●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேர்

உதிர்ந்து கொண்டிருக்கும்
இலைகளுக்கு மத்தியில்
தறிக்கப் படுகின்றன கிளைகளும்

ஆழ வேரூன்றி
விழுது விட்டது நம் தமிழ்

நவீன நாகரிகப் போர்வைக்குள்
நசுக்கப்பட்டிருக்கிறது
நமக்கான ஆதித்தமிழர் பண்பாடு

கலப்புக்களால்
கலையிழந்தது பாதி
ஆதிக்கத் தீயில்
அழிந்தொழிந்தது மீதி

களவாடப்பட்டதில்
மொழியின் தனித்துவம் ஒருபுறம்
நாமே கைவிடப்பட்டவற்றில்
கலை கலாசாரம் மறுபுறம்!

தனித்துவம் மிகு
ஆதி மொழி மறந்து
வேற்று மொழியை
சுவாசித்துக் கொண்டிருக்கிறோம்

மொழிகளுக்கெல்லாம் வேர்
நீருக்குள் புதைந்து கிடக்கிறது
குமரிக்கண்டமாய்!

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைமாறும் உலகம்

கலைகின்ற மேகமாய்
கரைகிறது காலம்
விரைகின்ற வாழ்க்கையில்
நீள்கிறது தேடல்

முடிவற்ற பயணங்கள்
விடையற்றுத் தொடர்கின்றன
திசை காண ஓடங்கள்
கரை தேடி நகர்கின்றன

மனிதங்கள் தொலைந்திட்ட
மானிட யுகத்திலின்று
புனிதங்கள் மரித்துப்போக
நிலைமாறும் உலகமிது

போலி சூழ் சாலைகளில்
பொய் மலர்கள் பூக்கின்றன
அநீதிகளின் ஆதிக்கத்தில்
நீதிகளும் மாழ்கின்றன

உணர்வுகளும் உறவுகளும்
செல்லாத நாணயமாய்
உயிரற்ற பணம் ஒன்றே
பாசங்களின் நிறைத்தராசாய்

ஒளிகொள் வையத்துள்
இருள்கொள் மனங்களேனோ?
தீர்ந்து போகும் நாழிகையில்
தீர்ந்திடுமோ உண்மைகளும்?

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதையே உன்னைக் காதலிக்கிறேன்

என் விடிகாலை
உனக்காக மலர வேண்டும்
என் அந்தி மாலை
உன்னோடு நிறைய வேண்டும்

என் உறக்கங்கள்
உனக்காகக் குறைய வேண்டும்
என் இன்பங்கள்
உன்னோடு உறைய வேண்டும்

என் துயரங்களில்
துணையாக நீயே வேண்டும்
என் உயரங்களில்
நீயே என்றும் ஒளிர வேண்டும்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்வுகளின் பாதையில்

உணர்வுகளின் பாதை வழி
உயிர்க்கிறது என் தேடல்
உதயமாகும் உன்னதங்கள்
உரமாகும் உள்ளுணர்வில்

உண்மை பொய் கடந்திருக்கும்
யதார்த்தத்தை நேசிக்கிறேன்
நிகழ்தகவைத் தாண்டி நிற்கும்
நிதர்சனத்தை யாசிக்கிறேன்

சிந்தனையில் புதுமைகளை
கலைந்து செல்ல அனுமதியேன்
காற்றில் கலைந்த கார்முகிலாய்
கனவுகளைக் கரைக்க மாட்டேன்

தோற்றம் கண்டு மதிமயங்கி
மாற்றம் கொள்ளும் மானிடராய்
போலி வேடம் தரித்திங்கு
என் சுயத்தைத் தொலைக்க மாட்டேன்.
●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருந்து பிறகு திருத்து

தரணியில் மாந்தரை
பிழையெனச் சொல்வார்
தன்னிலை எதுவென
அறிந்திடா மூடர்

தவறதை உணர்ந்துமே
திருந்திடார் செயலில்
பிறரது வழுக்களைக்
கூவியே உரைப்பார்

தமது குறையதை
நிறையெனப் புகழ்ந்து
அடுத்தவர் செயல்களில்
புறங்கூறி மகிழ்வார்

குறுகிய சிந்தனை
அகமதிற் கொண்டு
நிறையென எதையுமே
போற்றிடார் வாழ்வில்

திருத்திட முயலுமுன்
திருந்திடல் சிறப்பு
அவரவர் திருந்தினால்
சிறந்திடும் உலகு.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம்

உன்னை வளர்க்க
தன்னைத் தருகிறது
உண்மை அறிந்தும்
மரத்தை அழிக்கிறாய்

தியாகத்தின் அகராதி
மரம் என்று அறிவாயா?

உண்ணக் கனி தரக்
கிளையோடு முறித்தாய்
இளைப்பாற நிழல் தர
வெட்டி வீழ்த்தி வீடமைத்தாய்

தொழில் செய்யவும்
நாடிச் சென்றாய்
நடுத்துண்டில் அல்லவா
படகு செய்தாய்

பட்ட தடிகளைக்கூட
விட்டா வைத்தாய்
அடுப்புக்கல்லவா
இரையாக்கினாய்

இவற்றையெல்லாம்
செய்தாய் நீ!
பதிலுக்கு ஒரு மரத்தை நட்டாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடா!

துரோகத்தை நீ செய்துவிட்டு
அந்தப் பருவ மழையை
ஏன் பேசுகிறாய்?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலை மோதும் உள்ளம்

ஆயிரம் ஓசைகள்
அடங்காத ஆசைகள்
அருவி போல் உள்ளத்தில்
அலை மோதும் எண்ணங்கள்

கரை தழுவி நுரை உறங்கும்
கடல் தேடி நதி ஓடும்
கட்டிளமைப் பருவ உள்ளம்
கட்டுடைத்துப் புது வழி தேடும்

தத்தளிக்கும் உள்ளுணர்வு
தவிதவிக்கும் இளமனது
தாவிக் குதிக்கும் மந்தியாக
தாவித் தாவிக் கிளைகள் மாறும்

அன்பு தேடி அலைந்து திரிந்து
ஆறுதலுக்கு உறவு வளர்த்து
அனுதினமும் பாசம் பகிர்ந்திட
ஆசை துளிர்க்கும் இதயப்பரப்பில்

பற்றி எரியும் பருவங்கள் பல
பக்குவம் மறந்து பலதும் செய்யும்
பட்டுத் தெளிந்தே நிலமை உணரும்
பருவ மாற்றங்களும் படிப்பினையாகும்

இருப்பதை மறந்து பறப்பதை எண்ணி
இருப்பதும் இழக்கும் நிலையும் தோன்றும்
உள்ளதைக் கொண்டு உயர்வதை நாடி
உழைப்பின் வழியே உயரவும் முடியும்.

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிதாய் ஒரு விதி செய்வோம்

நாளைய விடியலில்
நானிலமும் தளைத்திடவே
நன்மைச் செடி முளைத்திடவே
நாளும் நாம் உழைத்திடுவோம்

உண்மைகளை உரமாக்கி
நேர்மை எனும் நீரூற்றி
பொய்மைகளைக் களை அறுத்து
முயற்சிப் பயிர் வளர்த்திடுவோம்

ஒற்றுமையின் பாதை வழி
ஒன்றுபட்ட உத்தமராய்
வேற்றுமைகள் விலக்கி விட்டு
வெற்றிக் கொடி ஏற்றிடுவோம்

ஏழைக்கும் வாழ்வளிப்போம்
ஏற்றம் பெற ஏணியாவோம்
சாதி மத பேதம் அகன்ற
சமத்துவ உலகம் படைப்போம்

இலக்கு ஒன்றில் உறுதியோடு
இறுதி வரை முயன்று வென்று
இயற்கை யோடு இசைந்து வாழ்ந்து
இனிதாய் வாழ்வை அழகு சேர்ப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீ நான்

பூக்களின் புன்னகை தேசம் நீ!
பூக்களால் உனதழகை ஆராதிப்பவன் நான்

புதுமைகளின் புதுவித அவதாரம் நீ!
புதுமைதனை யாசிக்கும் யாசகனாய் நான்

மௌனமே பேசு பொருளென நீ!
மௌனத்தில் ஒழிந்திருக்கும் வார்த்தையாய் நான்

அழகியற் கவிகளின் அரசியாய் நீ!
அனுதினமும் பிரியமுடன் வாசகனாய் நான்

நேசக்கணை வீசிப் போகிறாய் நீ!
சுவாசிக்க உனதருகைத் தேடுகிறேன் நான்

பார்வைகளில் படிந்துள்ள காட்சியாய் நீ!
பார்வைக்குள் சிறைபிடிக்கும் ஆவலுடன் நான்

தூரத்தில் இருந்தும் ஈர்க்கின்றாய் நீ!
தூரமும் குறைகின்ற நினைவுகளோடு நான்

உள்ளத் தேடல்களின் முடிவிலி நீ!
தேடித்தேடி உன்னில் தொலைகிறேன் நான்!!

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமைத்தனம் ஒழித்திடுவோம்
அறிவிற்கோர் ஆலயம் செய்வோம்
அன்பு கொண்ட மானிடராய்
அகிலம் போற்ற சிறந்திடுவோம்

தன்னம்பிக்கைச் சுடர் பரப்பி
தரணிக்கே ஒளி கொடுப்போம்
தன்னல மில்லாச் சூரியன் போல்
இருள் அகற்றிப் புது விடியல் படைப்போம்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லாய்ப் போன மனிதன்

கண்ணுக்கு முன்னே
கனக்கின்ற அநீதிகள்
கட்டவிழ்த்து விடப்பட்ட
மந்தைகளா மனிதன்?

காட்டுமிராண்டிக் கூட்டமாக
கலி பிடித்து அலைகின்றான்
ஈவு இரக்க மற்று - இன்று
இதயத்தில் ஈர மற்றுப் போனான்

வன்முறையின் வக்கிரத்தால்
வஞ்சக எண்ணத்திலே
மனிதத்தை தொலைத்து விட்டு
மிருகத்தையும் மிஞ்சி விட்டான்

அடாவடியும் அக்கிரமமும்
ஆடையாக உடுத்தினானோ?
அநீதிக்கு அடிமையாகிப்
பாவங்கள் பல புரிகின்றான்

உன்னத வாழ்க்கைதனை
போதையிலே அழிக்கின்றானே
உண்மை நேர்மை யற்று
நல்வழியும் மறந்து விட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னியர் மானமதைக்
காக்கவும் தவறுகின்றான்
கற்பையும் சூறையாடி
கருணையற்று நடக்கின்றான்

பாலியல் பலாத்காரம்
தினமொரு செய்தியாக வர
பாவத்தின் உச்சத்திலே
மனிதனின் உலகம் இன்று.

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழித்தடங்கள்

என் முன்னோர்களின்
வழித்தடங்களை அழித்து விடாதீர்கள்

இந்தப் பூமிப்பந்தில்
அவர்கள் வாழ்வியல் அளப்பரியது

வைர உளி கொண்டு
பொறித்து வையுங்கள்

உலகமே வியந்தது
புகழ்ந்தது போற்றியது பின்பற்றியது

கண்ணியம் தவறா ஒழுக்க நெறியிலும்
பண்பாடு கலாசார நேர் வழியிலும்
பயணப்பட்டார்கள்

இயற்கை, உயிரி, பெண்மை, மனிதம்
அனைத்தையும் காக்கும்
கடவுள்கள் ஆனார்கள்

தாய் மண்ணைத்தான்
உயிரென நேசித்தார்கள்

தமிழ் மொழியைத்தான்
மூச்செனச் சுவாசித்தார்கள்

தமக்காக வாழாது
நமக்காக வீழ்ந்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வாழ்வியலே
அவர்களால் எமக்குக்
கையளிக்கப்பட்டிருக்கிறது

வாய்ப்பேச்சு வீரர்கள் அல்லர்
செயல் தீரத்தில் உச்சம் தொட்டவர்கள்

மரணத்தையே குப்பிக்குள் அடக்கி
மாலையாக அணிந்தவர்கள்

அவர்கள் மட்டும் தான்
மரணத்தை வென்றவர்கள்.

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசல் தோறும் வேதனைகள்

வாலிபத்தின் தேடல்கள் தீர
வரமாகும் இனிமைகள் ஓய
வசந்தத்தின் சாரல்கள் காய
வாசல் தோறும் வேதனைகள்

விரைகின்ற கால ஓட்டத்தில்
விரைந்திடும் பருவ மாற்றங்கள்
விரையமாகும் பொழுதுகளில்
வேதனைகள் விழியோரத்தில்

அன்பின் வழி கண்ணீரும்
ஆழமான நேசிப்பின் சான்றாகும்
ஆருயிரும் தொலைவாகும் தருணம்
ஆறுதல் தேடும் உள்ளத்தில் துயரம்

உற்றதொரு உறவைத் தேடி
உள்ளத்தில் உணர்வுகள் கூடி
உயிர்வரை வேர்விட்ட சொந்தம்
உதிர்க்கின்ற சுடு வார்த்தைகள் துன்பம்

முயற்சிச் செடி கருகும் தருணம்
முடியாமல் தவிக்கும் நெஞ்சம்
உடைந்து போகும் உன்னதக் கனவும்
உருகி அழும் உள்ளே இதயம்

எண்ணங்கள் வண்ணங்களாகும்
எதிர்பார்ப்பு முடியாமற் போனால்
ஏற்றுக்கொள்ள மனமும் மறுக்கும்
எல்லாமே துன்பத்தில் உறையும்!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலம் கொத்திப் பறவை

வையம் வாழ் உயிர்களோ
நலம் குன்றி மாளுதே!
வளமான நிலம் எல்லாம்
வரட்சி கண்டு வாடுதே

நவீன மனித செய்கையால்
நஞ்சு படிந்த நிலங்களாய்
விளை நிலங்கள் கூடயின்று
விலை நிலங்கள் ஆனதே!

ஆழ் துளைக் கிணறுகளும்
ஆழ ஆழத் துளையிட
நிலத்தடி நீரும் வற்றி
பசுமை நிலமும் காய்ந்ததே!

உயிர் குடிக்கும் போரினால்
உருக்குலைந்து மண் வளம்
உயிர்கள் வாழத் தகுதியற்று
ஊனம் ஆகிப் போனதே!

பிளாஸ்ரிக் கழிவுகளால்
மாசு படும் நிலவளம்
அடுக்கு மாடிக் கட்டிடத்தால்
அல்லற் பட்டுத் தவிக்குதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்கள் மகிழ்ந்து வாழவே
இறைவன் படைத்த பூமியில்
நிலம் கொத்திப் பறவையாய்
மானிடர் செய்கை தொடருதே!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பன் புயலும் காகக்கூடும்

சிரமங்கள் பல தாண்டி
சிறு குச்சி பல தேடி
சிறு கூடு கட்டியதில்
ஆசைக்கு இரு முட்டை

பசி தூக்கம் தனை மறந்து
அனுதினமும் அடைகாத்து
குஞ்சுகளின் வரவுக்காய்
இணைகளின் தவமிருப்பு

உயிர் கொல் ஊர்வனவும்
தீங்கு செய் பிராணிகளும்
ஆபத்தின் வடிவங்களாய்
தினந் தினமும் போராட்டம்

முட்டையது குஞ்சாகும்
நன்நாளும் நெருங்கி வர
அளவில்லாப் பாசத்தை
அகத்திலவை சுமந்திருக்க

வண்ணக் கனவெல்லாம்
மண்ணாகிப் போனது பார்
பகலவன் ஒளியை மேவிக்
கார்மேகம் சூழ்ந்தது காண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பன் புயல் வந்து
கூட்டோடு மரம் சரிந்து
முட்டைகள் சிதறி விழ
ஐயகோ! பரிதாபம்

கதறிக் கரைந்துருகித்
தீராக் கொடுந்துயரில்
தவித்துத் துடித்தனவே
இணைகள் அவையிரண்டும்

காலத்தின் சக்கரத்தில்
ஏற்றுக்கொள்ள இயலாத
இப்படித்தான் பல சமயம்
பேரவலம் நிகழ்கிறது!

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீழ்வேனென்று நினைத்தாயோ?

தனித்து விடப்பட்ட போதே
தனிமை தனை வரமாக்கிக் கொண்டேன்
ஒதுக்கி வைக்கப்பட்ட போதே
ஓங்கி வளரும் மரமானேன்

புறக்கணிப்புக்களில் இருந்தே
புயலாகப் புறப்பட்டது என் வீரியம்
தட்டிப் பறிக்கப்பட்ட வாய்ப்புக்களே
விதைத்தது உத்வேகத்தை

தோல்விகளில் முடங்க வில்லை
வெற்றிக்காகத் தயாரானேன்
முயற்சியும் பயிற்சியும் சேர்த்து
புடம் போட்டேன் என்னை

தடைகளைத் தாண்டியே
வலுவானது பாதம்
தீயையும் தீண்டியே
திடமானது உள்ளம்

துயரங்களைத் துடைத்து
கவலைகளைக் களைந்து
காரிருள் பொழுதுகளை
எரித்தது தன்னம்பிக்கை!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவோலை

பூத்துக் குலுங்கிய
பூமரம் ஒன்று
வாடியிருக்கிறது

புன்னகை நிரம்பிய
உதடுகள் சுருங்கியே
சோகத்தைச் சொல்கிறது

வானவில் ஒளிர்ந்த
வானமும் ஏனோ
வெறுமையை உணர்கிறது

ஒளியைப் பிரசவித்த
குப்பி விளக்கொன்று
ஒளியிழந்து போகிறது

வசந்த காலத்தை அழைத்த
பூங்குயில் கூட இன்று
மௌனமாய் உறைகிறது

இருள் சூழ்ந்த மேற்கு வானம்
கிழக்கையே உற்று நோக்கி
ஏக்கத்தோடு தவிக்கிறது

தனிமைச் சிறைக்குள்ளே
கனதியான ஏக்கங்கள்
அடைபட்டுக் கிடக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோகத்தைப் போர்த்தியே
தள்ளாடும் வயோதிபம்
வாசற் கதவோரம் காத்துக் கிடக்கிறது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பின் வழியது

அழகு நிறைந்த பூமிப் பந்தில்
அன்பால் நிறைந்து பூத்திருப்போம்
ஆடி அடங்கும் வாழ்க்கையிலே
அகங்காரம் அழித்து வாழ்ந்திடுவோம்

ஆண்டவர்களும் மாண்டனர் தான்
அடிமைகளும் மறைந்தனர் தான்
அக்கிரமக் காரர்களும்
அழிந்தொழிந்து போயினர் தான்

அமைதிக்காய் உழைத்தவரே
அழிந்தாலும் நிலைத்து நின்றார்
அன்பின் வழி நின்றவரே
அகிலத்தில் உயர்வு கண்டார்

வாலிபத்தில் தீது செய்து
வயோதிபத்தில் தவிப்பதுவோ?
வளமான பருவமதில்
வாழ்வாங்கு வாழ்ந்திடுவோம்

ஏழை பணக்காரர் என்று
எதற்கு இங்கே வேற்றுமைகள்?
சாதி மத பேதம் என்று
ஏனிங்கே பிரிவினைகள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் காலம் சொற்ப காலம்
வாழும் வரை மனிதராவோம்
வாழ்வில் பிறரும் பயன்பெறவே
வாழ்ந்தபின்பு புனிதராவோம்

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் நானாகவே!

நான் நானாகவே
சலனம் இன்றிச் சாதுவாகிறேன்

எந்தச் சாயமும் என் சுயத்தை
மாற்றிவிடப் போவதில்லை
வீசப்படும் அழுக்குகளும் - என்மேல்
ஒட்டிக் கொள்ள அனுமதியில்லை

கதிரவனும் அம்புலியும்
என் பின்பற்றுகை - அவை
பல யுகங்கள் தாண்டியும்
தன்நிலை மாறாதவை ஆதலால்

ஒளி கொடுத்து ஒளிர்வதே
என் தெளிந்த நோக்கம்
காலம் கடந்தும் நிலைக்கும்
ஆத்ம ஞானமே இறுதி இலக்கு

மந்திர தந்திரங்களுக்கு
மயங்கிவிடப் போவதில்லை
சதியும் சூழ்ச்சியும் - எனதாற்றலை
மழுங்கடிக்க வாய்ப்புமில்லை

ஒருவேளை எய்யப்படும் அம்பு
என் உதிரத்தை புசிக்க வாய்ப்பிருக்கிறது
எனது பாதை நேராக இருப்பதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பாசங்களால் கட்டுண்டவன் தான்
உறவுகள் அறுத்தெறிகையில்
உயிருக்கும் உதிரம் சொட்டுகிறது

பாசமெனும் மோசக் கரங்களும்
வேடம் சூடிய போலி முகங்களும்
பல முறை வீழ்த்தியிருக்கிறது
அத்தனை முறையும் எழுந்திருக்கிறேன்

புரிந்தது ஒன்று மட்டுமே - இது
மனிதர்கள் வாழும் நாடல்ல - பல
நரிகள் நடமாடும் சுயநலக் காடு.
●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடிசையிலே வாழ்வோமே!

நவீனத்தை நாடித் தானே
நாகரிகத்தை சூடிக் கொண்டோம்
நகர வாழ்க்கை தேடித் தானே
நரக வாழ்வில் புதைந்து போனோம்

இயற்கையை வெறுத்ததாலே
இன்பத்தைத் தொலைத்து விட்டோம்
கிராமத்தை ஏளனம் செய்தோம்
துயரத்தில் மூழ்கிப் போனோம்

அன்றாட உணவாய் இன்று
ஔடதங்கள் மாறிப் போனது
விருந்தகத்து உணவுகள் கூட
மெல்லக் கொல்லும் விசமென்றானது

மருந்து தெளித்த காய்கறி வகையே
கடைகள் தோறும் நிறைந்திருக்குது
நச்சுப் பதார்த்தம் கலந்த பொதியே
துரித உணவென விற்பனையாகிறது

முந்தையர் வாழ்வியல் போன்று
ஆரோக்கிய வாழ்வின்று இல்லை
குடிசையில் வாழ்கின்ற வாழ்வே
குலவயப் பேரின்பப் பேறு.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்ந்த இடத்தில்

பரந்து விரிந்த பூமிப் பந்தில்
யாவரும் இங்கே புள்ளிகள் தான்
புள்ளியும் கூடப் பிரகாசித்திடும்
உயர்ந்த இடத்தில் இருக்கும் மட்டும்

உலகமே உன்னை நாடி வரும்
உறவுகள் கூடத் தேடி வரும்
உயர்வில் இருந்து தாழ்ந்து விட்டால்
உற்ற உறவும் விலகிச் செல்லும்

பூக்களும் உனக்குத் தலை அசைக்கும்
பூங்காற்றும் உனக்காய் இசை அமைக்கும்
புதுப் புது வரவுகள் வந்து
புதிய தோர் சொந்தம் வளர்க்கும்

செய்கை எல்லாம் அழகாய் ஒளிரும்
சேவகம் செய்யக் கரங்கள் உயரும்
எட்டாத உயரத்தை எட்டிப்பிடித்தால்
ஏற்றம் உனக்கு மாலை சூட்டும்

சிரித்தாலும் கண்கள் கதறி அழுதாலும்
ஆதரவாய் ஆயிரம் உள்ளங்கள் வரும்
உயர்ந்த இடத்தை இழந்துவிட்டால்
உனது நிழலே உன்னை வெறுக்கும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னதமானவர்கள்

விடியல் தேடும் வீரிய வித்துக்கள்
இவர்கள் வியர்வையில் தான்
விடிகிறது சூரியக் கிழக்கு

விருட்சமாக நிழல் தரும் தியாகங்கள்
வெயிலும் மழையும் - இவர்களின்
உற்ற உறவுகள்

மெழுகுவர்த்தியாக உலகுக்கு ஒளியூட்டி
இருளோடு போராடும் இவர்கள் வாழ்க்கை

முட்களும் கற்களும் தைத்திட்ட பாதங்கள்
முதலாளித்துவ பாதணிகளில்
மிதிபடும் ஏழைகள்

ஓடாகத் தேய்ந்திடும் ஓயாத அலைகள்
ஒரு நேர உணவுக்குப் போராடும் விட்டில்கள்

போற்றப் பட வேண்டியவர்கள்
உடலாலும் உள்ளுணர்வாலும்
வாழ்த்தப்பட வேண்டியவர்கள்
வார்த்தையாலும் செய்கையாலும்

பாராட்டப்பட வேண்டியவர்கள்
பாசத்தாலும் மனித நேயத்தாலும்
பார் புகழ வேண்டியவர்கள் - இவர்கள்
பார் தளைக்கப் பாடுபடும் பாட்டாளிகள்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீணைகள் எரிகின்றன நரகத்தில்

தந்திர நரிகளின்
காமத்தின் வேட்டையில்
தந்தியறுந்து வீணைகள்
எரிகின்றன நரகத்தில்

சின்னஞ்சிறு பாலகர்கள்
உலகறியாப் பருவங்கள்
பரிதவிக்க தவி தவிக்க
கொடூர மிருகங்கள்
குதறிப் பசி தீர்க்கின்றன

மானிடமே தலை குனிய
மனிதம் அற்ற கேவலம்
அற்ப சொற்ப சுகத்துக்கு
அரங்கேறிடும் பேரவலம்

கட்டவிழ்த்து விடப்பட்ட
காட்டுமிராண்டித் தனம்
உலகத்தின் மூலைகளில்
நொடிக்கொரு முறை
நிகழ்ந்திடும் கொடூரம்

கனவுகள் பல சுமந்து
கல்வி தேடும் பாவைகளும்
காமுகர்கள் கரங்கள் பட்டுக்
கருகிப் போகும் மொட்டுக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறைகள் உலகெங்கும்
வன் கொடுமைகள் ஏராளம்
பெண் வர்க்கம் பரிதவிக்க
யார் வருவார் நிலை மாற்ற?

நீதி தேவர்கள் கரங்களே!
நீதி வேண்டும் பெண்மைக்கு
நித்தம் நிகழும் அநீதிக்கு
நிரந்தர தீர்ப்பு எழுதுங்கள்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பனி

பூவரசு வேலியிலே
படுத்துறங்கும் புலுனியம்மா
வாட்டுகின்ற கொடும்பனியை
எப்படி நீ தாங்குவாயோ?

அதிகாலை நாலரைக்கே
கூவியெம்மை எழுப்பிவிடும்
கொண்டைக்காரச் சேவலாரே
குளிரைக் கண்டு அஞ்சுவீரோ?

சாம்பல் மேட்டில் சாதகமாய்
உடலை நன்கு புதைத்துறங்கும்
நன்றியுள்ள நாய்க்குட்டியே
குளிரின் நாட்கள் துயரமன்றோ?

ஆட்டுக்குட்டி கன்றுக்குட்டி
அன்பான பூனைக்குட்டி
கோடிப்புறக் கொட்டிலுக்குள்
குளிர் நடுக்கம் கொண்டீர்களோ?

உடல் முழுக்க மூடிக்கட்டி
சுருண்டபடி படுத்தாற் கூட
முன்பனிக்காலக் குளிரில் தேகம்
புல்லரித்துச் சிலிர்க்குதம்மா!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவறியாப் பயணம்

முயற்சிப் பாதை வழி
முகவரி தேடி நகர்கின்றது
முடிவறியாப் பயணம்

கதிரவனின் மறைவுகளும்
புதிய புலர்வுகளைத்தான்
விதைத்து விட்டிருக்கின்றது

முகிலுக்குள் சில சமயம்
முழுநிலவு சிறைப்பட்டு
வெளிப்பட்டு ஒளி கொடுத்து
மகிழ்வூட்டி மிளிர்கின்றது

கலங்கித் தெளியும்
நீர் நிலையென வாழ்க்கை
துயர் சூழ்ந்து துவண்டு மீள்கிறது

இதமாக வீசும் தென்றலும்
புயலாக மாறும் சந்தர்ப்பங்கள்
தடைகள் தகர்க்கப்படுகிறது

மண்ணை முட்டி முளைக்கும்
விதைகளில் தான் துளிர்க்கிறது
நம்பிக்கைப் பெரு விருட்சம்

வளைந்து நெளிந்து
கனவுகள் ஆயிரம் சுமந்து
மேடு பள்ளம் கடந்து
நடை போடுகிறது வாழ்க்கைப் பயணம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதன் நினைப்பதுண்டு!

வானும் நிலமும்
வீசிடும் காற்றும்
வற்றாத நதியும்
வளைந்தோடும் ஆறும்

இயற்கையின் எழிலும்
இறைவனின் படைப்பும்
தனக்கே உரியதென்று
மனிதன் நினைப்பதுண்டு

பறப்பவை மிதப்பவை
நடப்பவை ஊர்பவை
எல்லாம் சிறிதென்றும்
தானே பெரிதென்றும்

ஆறறிவு கொண்டதனால்
அகங்காரம் கண்டதுண்டு
தலைக்கனம் கொண்டதுண்டு
அடக்கியாள முயன்றதுண்டு

இயற்கையை அழித்தொழித்து
இயந்திரங்கள் படைத்து விட்டு
இயந்திர வாழ்வியலில்
இன்பம் பெற நினைத்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்கையைப் படைத்து விட்டு
வான் வெளியை அளந்து விட்டு
விண்வெளியில் வீடு கட்டி
விந்தை பல செய்த போதும்

இயற்கையின் சீற்றங்களை
எதிர் கொள்ளத் திணறுகிறான்
கால நிலை மாற்றமதைக்
கண்டு மனம் வாடுகிறான்

மனிதன் நினைப்பதுண்டு
மனிதனே எல்லாம் என்று
மரணம் வரும் வரைதான்
மனிதனின் ஆட்சி இங்கு!
●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலையாகுவேன் நீ கரையாகினால்

நீ கடந்து போகிறாய்
என்னைப் போலவே
அல்லற் படுகிறது கடலலைகள்

உன் பாதம் தீண்டவே
மோதி மோதி உடைகின்றன
மீண்டும் மழையாகி வரக்கூடும்

காற்றுக் கூடத்
தென்றல் ஆனது
உன்னில் பட்டு
நான் மட்டும் எம்மாத்திரம்

மதியக் கதிரவனும்
மயங்கிப் போய்விட்டான்
உன்னைக் கண்டு
முகில்களும் குடை பிடிக்கின்றன

முத்தைக்
கடலுக்குள்ளே தேடுகின்றார்
நீ இங்கே என் கரம் பிடித்து
கரையில் நடமாடுவதை அறியாமல்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விண்ணப்பம்

உன்னை நான்
பல முறை அழைத்திருக்கிறேன்
நீயோ வர மறுத்துவிட்டாய்..

சில சமயம் வந்தும் வராததுமாய்
சென்றுவிட்டாய்..
இப்போது மட்டும் வந்த வழி
மறந்துவிட்டாயா என்ன?

ஒன்றை மட்டும் புரிந்து கொள்
எப்போதும் உன்னையே தான்
அண்ணார்ந்தபடி பாத்திருக்கிறேன்

உன் வரவின்றிக் காய்ந்து
தவமாய்த் தவித்திருக்கிறேன்
அவ்வப்போதேனும் என்னையும்
உன் வரவால் குளிர்வித்துவிடு

இப்படித் தொடராக வந்து நின்று
நர்த்தனம் ஆடாதே!

உன் வரவில்லையேல்
உலகுக்கே பெரும் துயரம்
உன் வரவு தொடர்வதே
உயிர்களுக்கெல்லாம் பேரவலம்

அளவாக வந்து அன்பாகப் பொழிந்து
அமைதியாகச் செல் மழையே!

இது உரிமையுள்ள
இந்த மண்ணின் சிறு விண்ணப்பம்.

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞனே சற்று நில்!

ஓ இளைஞனே! நீ செல்வதெங்கே?
வந்த வழி மறந்து விட்டாய்
செல்லும் வழி தொலைத்து விட்டாய்
ஏதேதோ எண்ணங்களில் சிறுமையாக வாழுகின்றாய்

வீரத்தை உலகுக்கே உணர்த்தியவர் பூமியிலே
மண்ணுக்காய் மரணித்த மறவர்களின் தேசத்திலே
ஓடுகின்ற கூட்டத்தோடு வாளெடுத்து ஓடுகின்றாய்
மதுவுக்கு அடிமையாகி மாதரையும் சீரழிக்கின்றாய்

உணவின்றி உணர்வுக்காய் உயிரையும் துறந்தார்கள்
எதிரியை போர்முனையில் அலறியோட வைத்தார்கள் - நீயோ!
பலபேர் கூட்டாகி அப்பாவியைப் பந்தாடி
அராஜகத்தில் அடிமைப்பட்டு அழிவைத்தேடி விரைகின்றாய்

உன் தந்தையிடம் கேட்டு நீயும்
நம் முந்தையரின் வீரம் படி
வம்பிழுத்து வீதியிலே வீணாகச் சண்டையிட்டு
அடாவடிகள் புரிவதொன்றும் வீரமில்லை கோழைத்தனம்

தமிழனை அழிப்பதற்கு தமிழனே வழியென்று
கைகொட்டிச் சிரிக்கிறார்கள் கயவர்கள் மகிழ்ச்சியிலே
அறியாமல் ஆடாகி வேள்விக்குப் பலியாகி
திட்டமிட்ட சதிக்குள்ளே சிக்குண்டு அழிவதேனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வா இளைஞனே! அறிவைத் தேடு..
அகிலத்திலே உயர்ந்திட வழியைத் தேடு..
தலைசிறந்த தமிழ் மொழியைப் போற்றிப்பாடு..
தரணிபோற்ற உத்தமனாய் வாழ்ந்து காட்டு!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழைப்பாலன்

வழமையானதே
எல்லாப் புலர்வுகளும்

இவ்வந்திக்கு மட்டும்
ஆரவாரச் சிறகிருக்கிறது

தெருவின் இருமருங்கும்
மக்கள் பெருவெள்ளம்

வர்ணஜாலம் கொண்ட
மின்னொளி மாநகரம்.

வானதிரும் பல வண்ண
வாணவேடிக்கைகள்

புத்தெழுச்சி பூண்டிருக்கும்
நள்ளிரவின் நடுச்சந்தி

இயந்திரப் பிரவாகமாக
ஊர்கின்ற சக்கர ஊர்திகள்

கோலாகலத் தோற்றத்தில்
அடுக்குமாடிக் கட்டடங்கள்

நவீன நாகரிக உடைகளின்
ஆடம்பர அணிவகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாலயம் ஒளிர்கிறது
மண்டபம் நிறை பக்தர்கள்

ஆம்: இவை அத்தனையும்
தேவபாலன் பிறப்பிற்கானதே!

எல்லோரும் தேவபாலனிடம்
கையேந்தி இறைஞ்சுகிறார்கள்

எல்லோரிடமும் ஓர் ஏழைப்பாலன்
கையேந்தி இறைஞ்சுகிறான்
சில மெழுகுவர்த்திகள் கைகளில்.
●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தை மகள் பிறப்பு

தை மகள் பிறந்திருக்கிறாள்
என் தெருவெல்லாம் ஆரவாரம்

புத்தாடையும் புதுப்பானையும்
பெட்டிக் கடை முதல்
தொடர் மாடிக் கடை வரை
வியாபாரம் களைகட்டுகிறது

மாவிலையும் தோரணமும்
மஞ்சள் கரும்பு பழவகையும்
வாழையிலையும் என்று
உயர் மரியாதைக்குரித்தாகின்றன

வீதியெங்கும் சன நெரிசல்
கோயில்கள் கடைத்தெருக்கள்
இல்லங்கள் தோறும்
கோலாகலக் கொண்டாட்டம்

ஊரே மகிழ்ச்சியில்
ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கிறது

பக்கத்துத் தெருவோரம்
ஒரு குடிசையிலே மட்டும்
மழலையின் அழுகுரல் ஒலி..

ஆம், அங்கே ஏழைப்பெண்
தாயாகியிருக்கிறாள்:
தைமகள் பிறந்திருக்கிறாள்.

•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றிகள்

வேலணையூர் தாஸ்
மைதிலி ஜெயதாசன்
எஸ்.விஜய்

உதயன்
தினக்குரல்
மெட்ரோ news
தினகரன்
சக்தி FM

மற்றும்,

**வெளியீட்டு அனுசரணை**
**வேலணை மக்கள் ஒன்றியம்**

கவிஞரின் கவிதை நூல்கள்

| | |
|---|---|
| பொற்கனவு | - 2018 |
| நிலா நாழிகை | - 2018 |
| கட்டிடக் காடும் யுரேனியக் கதிரும் | - 2019 |
| கார்காலப் புலர்வுகள் | - 2021 |
| பேரன்பின் படிமங்கள் | (பதிப்பில்..) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மொழியின் விரிவையும் சொற்களின் ஆழங்களையும் நோக்கி நகர முனையும் இளவலாக ரஜிந்தன் எனக்கு அறிமுகமாகிறார். அறம், இயற்கை, அர்ப்பணிப்பு, மானுடம் என்பவை அவரைத் தீவிரமாக ஈர்க்கின்றன. விவரணமும் அறிவுரைப் பாங்கும் கவிதைகளில் தூக்கலாக இருந்தாலும் "ஆரவாரச் சிறகிருக்கும் அந்தி", "யாகத் தீ வளர்க்கும் கிணற்று வேலி" எனச் சிறப்பான படிமங்களும் வந்து மின்னுகின்றன. "சிறு தருவில் ஒரு குருவி" என்று எழுதுகிறார் உண்மை தான். நாமெல்லாம் கவிதை எனும் பெரும் தருவின் சிறு குருவிகள் தான்.

**சேரன்**



9786249736702

Rs.299/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org